IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:112/2017

**DEP OF WITNESS: PW1** NAME : Munirathinam

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

என்னிடம் காட்டப்படும் எலக்சன் வாக்காளர் பட்டியல் அடையாள அட்டையில் உள்ள போட்டோவில் உள்ளது நான் இல்லை. என்னிடம் காட்டப்படும் மற்றொரு வாக்காளர் பட்டியலில் அட்டையில் உள்ள போட்டோ யாருடையது என்று எனக்கு கண் பார்வை சரியாக தெரியாததால் தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வாக்களார் பட்டியலில் 343 வரிசையில் உள்ள போட்டோ யாருடையது என்று தெரியவில்லை. இவ்வழக்கில் கோவிந்தசாமி என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாவா சொத்து அவர்களுடையது என்று உரிமை கோரி கட்சி செய்துள்ளதாக எனது வழக்கறிஞர் மூலமாக தெரிந்துகொண்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகள் 04.07.2017-ம் தேதி அறிவிப்பு அனுப்பிவைத்திருந்தார்கள். அந்த அறிவிப்பில் என்ன விவரம் சொல்லியுள்ளார்கள் என்று எனக்கு புரியவில்லை. அந்த அறிவிப்பிற்கு 13.07.2017-ல் எனது வழக்கறிஞர் மூலம் பதிலறிவிப்பு கொடுத்திருந்தேன். அந்த பதிலறிவிப்பில் தாவா சொத்து என்னுடையது என்றும் பிரதிவாதிகள் அடாவடியாக பிரச்சனை செய்கிறார்கள் என்று தெரிவித்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.6 ஆவணம் என்ன என்று எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.8 மற்றும் வா.சா.10 ஆவணம் என்ன என்று எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு எனது மனைவி உஷா தான் சீனன் என்பவர் வாரிசு என்று வாரிசு சான்று வாங்கியுள்ளேன். இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக மேலாலத்தூர் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றதாக சீனிவாசன் என்பவர் பெயரில் மேற்படி வங்கியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தினை சீனன் என்பவரிடம் நான் வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சீனன் என்ற நபர் இல்லை என்றும் சீனிவாசன் என்ற நபர் தான் உள்ளார் என்றும் சீனிவாசன் பெயரை தவறாக பயன்படுத்தி சீனன் என்பவர் பெயரில் போலி ஆவணம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. போலி ஆவணத்தினை அடிப்படையாக வைத்து வருவாய் ஆவணங்களை மாற்றம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சீனன் என்பவரின் மகள் எனது மனைவி உஷா என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சீனிவாசன் என்பவருக்கு உரிமைப்பட்டது என்றும் அவருக்கு திருமணமே ஆகவில்லை என்று சொன்னால் சரியல்ல. 30.07.2017 மற்றும் 10.08.2017-ம் தேதியன்று பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற விவரம் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. அது சம்பந்தமாக குடியாத்தம் கிராமிய காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனுபவித்து வருகின்ற தாவா சொத்தில் நான் தான் அவர்களை இடையூறு செய்தேன் என்றால்

சரியல்ல. அதனால் தான் பிரதிவாதிகள் 04.07.2017-ம் தேதியன்று வழக்கறிஞர் மூலம் வா.சா.4 அறிவிப்பினை கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த பிறகு பொய் புகார் கொடுத்து மிரட்டியதால் பிரதிவாதிகள் முன் ஜாமின் தாக்கல் செய்தார்கள் என்றும் அதற்கு காவல் துறையினர் அது போன்று எவ்வித புகாரும் என்னால் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்கள் என்று சொன்னால் தெரியாது. உண்மையில் நான் சொல்வது போன்று 30.07.2017 மற்றும் 10.08.2017-ல் பிரதிவாதிகள் பிரச்சனை செய்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றும், அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் காவல் துறையினர் பிரதிவாதிகள் தாக்கல் செய்த முன்பிணையில் புகாரைப்பற்றி தெரிவித்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவாவில் தாக்கல் செய்து முதல் விசாரணையின் மூலமாக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சீனிவாசன் என்பவருக்கு உரிமைப்பட்ட சொத்து சம்பந்தமானது இல்லை என்று சொன்னால் சரியல்ல. முனிரத்தினம் என்ற மற்றொரு பெயரில் நான் பல ஆவணம் தயார்செய்துள்ளேன் என்றும் ராஜேந்திரன் என்ற பெயரிலும் நான் பல ஆவணங்கள் தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிள்ளைகள் படித்த பள்ளியில் என்னுடைய பெயர் ராஜேந்திரன் என்று தான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சீனிவாசன் என்பவர் உயிருடன் இருக்கும் போது வா.சா.2 ஆவணத்தினை எனக்கு ஒருபோதும் எழுதிகொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.2 ஆவணத்தில் உள்ள கையெழுத்து சீனிவாசன் கையெழுத்தே இல்லை என்றால் சரியல்ல. சீனிவாசன் என்பவரின் போட்டோவினை வைத்து வா.சா.2 ஆவணத்தினை நானே தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் சீனிவாசன் என்பவரிடம் நான் கிரயம் வாங்கியிருந்தால் எனது உறவினர்களான பிரதிவாதிகளை முன்னிறுத்தி சொத்தினை வாங்கியிருப்பேன் என்றும் சம்பந்தமே இல்லாத நபர்களை சாட்சிகளாக வைத்து போலியாக ஆவணம் தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வட்டாட்சியரிடம் தாவா சொத்து சம்பந்தமான வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று கேட்டதற்கு சீனிவாசன் என்பவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றும் சீனன் என்ற பெயரில் பட்டா இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இன்றளவும் நான் பொதுவாக மேல்முட்டுகூர் கிராமத்திலும் சின்னஆலங்கனேரி என்ற கிராமத்திலும் தனிதனியாக தனிதனிபெயரில் வாக்காளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை வைத்து பல போலி ஆவணங்கள் தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாவிற்கு வழக்குமூலமே இல்லை என்பதால் இவ்வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. A.CHELLAPANDIAN,
DISTRICT MUNSIF.